## சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து துவங்கி இருக்கிறேன்!

# 200க்கும் அதிகமான தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறப் பாடுபடுவோம்!

## மண்டபம் பேரூராட்சித் தலைவர் இராஜா இல்லத் திருமண விழாவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

இராமநாதபுரம், பிப்.4

**இராமநாதபுரம் மாவட்டம் - மண்டபம் பேரூர்க் கழகச் செயலாளரும், பேரூராட்சித் தலைவருமான ராஜா இல்லத் திருமணத்தை நேற்று முன்தினம் காலை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “சட்டமன்றத் தேர்த் பிரச்சாரத்தை நான் இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து துவங்கியிருக்கிறேன்” என்றும், - “சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெற, கழகத்தினர் நாம் அனைவரும் இன்று தொட்டே கண்துஞ்சாது பாடுபடத் தொடங்குவோம்” என்றும் குறிப்பிட்டார்.**

**மருத்துவர் தில்லை ராஜ்குமார் - மருத்துவர் சக்திபிரியா திருமண விழாவில் கலந்துகொண்டு துணை முதலமைச்சர் ஆற்றிய உரை வருமாறு:-**





இன்றைக்கு நம் மண்டபம் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சித் தலைவர் அண்ணன் ராஜா அவர்களின் அன்பு மகன் மருத்துவர் தில்லை ராஜ்குமார், மருத்துவர் சக்தி பிரியா ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். பொதுவாக திருமணம் நடக்கும் இடத்திற்கு மண்டபம் என்று பெயர் இருக்கும். ஆனால், இந்த ஊர் பெயரே மண்டபமாக இருக்கிறது. எனவே, இந்த மண்டபத்தில் திருமணம் நடக்கிறது என்பது சரியான ஒரு உவமை.

இங்கு உற்சாகமாக வரவேற்பு அளித்த நம் ராமநாதபுரம் மாவட்டக் கழகத்திற்கும், மாவட்டக் கழகச் செயலாளர், மாவட்ட அமைச்சர் அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அவர்களுக்கும், அதேபோல் நேற்று இரவில் இருந்து, இந்த மாவட்டத்திற்குள் நுழைந்தது முதல் உற்சாகமான வரவேற்பு அளித்த, அனைத்து கழகத்தினருக்கும், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களுக்கும், இளைஞர் அணியைச் சேர்ந்த தம்பிமார்களுக்கும், தொ.மு.ச-வை சேர்ந்தவர்களுக்கும், பொது மக்களுக்கும், கழகத்தினருக்கும் மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், இளைஞர் அணி தம்பிமார்கள் அத்தனை பேருக்கும் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் ராஜா அவர்களின் இல்ல திருமணத்தில் கலந்து கொள்வது உள்ளபடியே எனக்கு கூடுதல் பெருமை, கூடுதல் மகிழ்ச்சி. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழகத் தலைவரின் மீது அதீத பற்று கொண்டு, தன் இளம் வயதிலேயே இந்த இயக்கத்திற்கு தன்னை ஒப்படைத்துக் கொண்டவர் தான் அண்ணன் ராஜா அவர்கள். கழகத்தின் அடிப்படை உறுப்பினராக இருந்து, ஒன்றிய பிரதிநிதியாகப் பணியாற்றி, பேரூர் கழகச் செயலாளராக கிட்டத்தட்ட 10 ஆண்டு காலம் இந்தப் பகுதியில் சிறப்பாக மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

அண்ணன் ஆற்றி இருக்கின்ற அந்த கழகப் பணிக்கு சான்றாகத்தான் மண்டபம் பகுதி மக்களின் அன்பைப் பெற்று இன்றைக்கு பேரூர் கழகத் தலைவராகவும் சிறப்பாக மக்கள் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார். அண்ணன் அவர்களை பொறுத்தவரை, ஒரு பக்கம் கழகப் பணி என்றால், இன்னொரு பக்கம் கல்விப் பணி. இந்த இரண்டு பணியையும் மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்.

மூன்று கல்வி நிறுவனங்களை நடத்தி இந்த பகுதிகளில் உள்ள பிள்ளைகளுக்கு கல்விச் சேவையை செய்து வருகிறார். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அவரின் இல்ல மணவிழாவில் பங்கேற்பதில் உண்மையிலேயே எங்களுக்கெல்லாம் மிக மிக பெருமை. அது மட்டுமல்ல, எங்கள் இளைஞர் அணியின் ராமநாதபுரம் மாவட்ட அமைப்பாளர் சகோதரர் சம்பத்ராஜா அவர்களின் அக்கா மகன்தான் இங்கு இருக்கின்ற மணமகன்.

ராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் ராஜா அவர்கள், கழகத் தலைவர் அவர்களால் 2012-ஆம் ஆண்டு இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டவர். 11 ஆண்டுகள் துணை அமைப்பாளராக இருந்தவரை, அவரின் கழகப் பணியின் அடிப்படையில் கடந்த 2023-ஆம் ஆண்டு நான் இளைஞர் அணி மாநில செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு, அவருக்கு மாவட்ட அமைப்பாளர் என்ற பொறுப்பு வழங்கப்பட்டது.

அவர் அமைப்பாளராக பொறுப்பேற்ற இந்த ஒன்றரை ஆண்டுகளில், நம் மாவட்டச் செயலாளர் அண்ணன் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், அதேபோல் துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா ஆகியோரின் ஆலோசனையின் பேரில், நீட் தேர்வு எதிர்ப்பு உண்ணாவிரதம், இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு, சமூக வலைத்தளப் பயிற்சி முகாம்கள், கலைஞர் நூற்றாண்டு நூலக திறப்புகள், பேச்சுப்போட்டி என பல்வேறு பணிகளை ஒருங்கிணைத்துள்ளார், பல பணிகளை ஒருங்கிணைத்தும் வருகிறார், வருங்காலத்தில் இன்னும் சிறப்பாக பணியாற்றுவார்.

### நீட்டைத் தொடர்ந்து எதிர்ப்போம்!

இது மட்டுமன்றி மூன்றாவது முறையாகப் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து மக்கள் பணியாற்றி வருகிறார். சம்பத் ராஜா அவர்களின் கழகப் பணி, மக்கள் பணி மேலும் சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திருமணத்தில் கலந்து கொள்ளும் பொழுது, நம் குடும்ப இல்ல திருமண விழாவில் கலந்து கொள்ளும் உணர்வு எங்களுக்கு ஏற்படுகிறது. மேலும் இந்த திருமணமே ஒரு சுயமரியாதைத் திருமணமாக நடந்து கொண்டிருக்கிறது. மணமகன், மணமகள் இருவரும் மருத்துவர்கள். நன்கு படித்தவர்கள். எனவே அவர்களுக்கு அதிக ஆலோசனை சொல்லத் தேவையில்லை.

அதில் முக்கியமாக தம்பி தில்லை ராஜ்குமார் அவர்கள் நீட் தேர்வு இல்லாத காலத்திலேயே மருத்துவர் ஆகிவிட்டார். ஆனால் தங்கை சக்தி பிரியா அவர்கள் நீட் என்ற நெருப்பாற்றைக் கடந்து, கஷ்டப்பட்டு இன்றைக்கு மருத்துவராகி இருக்கிறார். இந்த நீட் தேர்வை கடந்து வருவதற்கான வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பது இல்லை. அதனால்தான் இன்று வரைக்கும் நீட் தேர்வு ஒழிய வேண்டும் என்று நம் கழக அரசு தொடர்ந்து சட்டப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

இங்கு நிறைய மகளிர் வந்து இருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் ஆண்களை விட அதிகமான மகளிர் வந்து இருக்கிறீர்கள். 100 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வளவு பேர் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உரிமை கிடையாது. இதற்கெல்லாம் போராடி உங்களுக்கான இந்த உரிமையைப் பெற்று கொடுத்ததுதான் நம் பெரியார் அவர்கள், நம் திராவிட இயக்கம்.

### முதல் கையெழுத்தே பெண்களுக்குத்தான்!

பெண் உரிமை, பெண் விடுதலைக்காக தந்தை பெரியார் கொடுத்த குரல்தான் பெண்களின் அடிமைச் சங்கிலியை உடைத்து எரிந்தது. அவரால் பயன்பெற்ற கோடான கோடி மக்களின் உள்ளங்களிலும், இங்கு திரண்டு இருக்கின்ற மகளிர் மகிழ்ச்சியிலும் பெரியார் என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பார். பெரியாரின் சிந்தனைகளையும், பேரறிஞர் அண்ணாவின் கனவுகளையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் சட்டங்களாக மாற்றிக் காட்டினார். அவரின் வழியில் நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மகளிர் ஏற்றங்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்.

உதாரணத்திற்கு கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு நம் முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து, பெண்களுக்கான கையெழுத்து. அதுதான் மகளிருக்கான கட்டணம் இல்லா பேருந்து வசதி திட்டம். இதுவரை கிட்டத்தட்ட 600 கோடி பயணங்களை பெண்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும், இந்தத் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

அதேபோல் புதுமைப்பெண் என்ற திட்டம். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும், படிக்க வேண்டும். பள்ளிக்கல்வி மட்டும் முக்கியமில்லை, உயர்கல்வி படிக்க வேண்டும் என்று, அரசு பள்ளியில் படித்த மாணவிகள் உயர் கல்வி கல்லூரியில் சேர்ந்து படித்தால் அவர்களுக்கு புதுமைப்பெண் என்ற திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்க தொகை வழங்கப்படுகிறது. இதன் மூலம் கிட்டத்தட்ட நான்கரை லட்சம் மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள்.

அதேபோல் தமிழ்ப்புதல்வன் திட்டம். மாணவிகள் மட்டுமல்ல மாணவர்களும் படிக்க வேண்டும் என்று அரசு பள்ளியில் படித்து எந்த கல்லூரியில் சென்று உயர் கல்வி படித்தாலும் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக நம் மாநிலத்தில்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. பெற்றோர்கள் தன் குழந்தைகளை மகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். என் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு திராவிட மாடல் அரசு இருக்கிறது. நம் முதலமைச்சர் இருக்கிறார், அவர் பார்த்துக் கொள்வார். காலையில் பள்ளிக்குச் சென்றால் தரமான காலை உணவு, அதன் பிறகுதான் படிப்பு என்று வாழ்த்தி குழந்தைகளை நிம்மதியோடு, மகிழ்ச்சியோடு, பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்து குழந்தைகளுக்கும் காலையில் பள்ளிக்குச் சென்றால் முதலில் தரமான உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 20 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் வாயிலாக பயன் பெற்று வருகிறார்கள்.

அடுத்து, இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கின்ற வகையில் ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். கிட்டத்தட்ட ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. எனக்குப் புரிகிறது இன்னும் கூடுதலான மகளிருக்கு நீங்கள் மகளிர் உரிமைத் தொகை தர வேண்டும் என்று நீங்கள் நினைப்பது என் காதுகளுக்கு கேட்கிறது. சட்டப்பேரவையில் அதற்கான அறிவிப்பையும் நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். அடுத்த மூன்று மாதங்களில் நிச்சயம் தமிழ்நாட்டில், தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமை தொகை வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் எனது வாக்குறுதியாக தர விரும்புகிறேன்.\

### நம்பர் 1 மாநிலம் தமிழ்நாடு

இந்த பல்வேறு திட்டங்களால் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக மாறி இருக்கிறது. இதை பொறுத்துக் கொள்ள முடியாத சில பேர், பல்வேறு அவதூறுகளை பரப்பி கொண்டிருக்கிறார்கள். நான் யாரைப் பற்றி குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்கே தெரியும்.

அதில் முதன்மையானவர் யார் என்றால் நம் ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா? கிடையாது. ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர். கிட்டத்தட்ட அவர் ஒரு தபால்காரர் மாதிரி. முதலமைச்சர் சொல்வதை ஒன்றிய அரசிடம் சொல்ல வேண்டும். ஒன்றிய அரசு சொல்வதை முதலமைச்சரிடம் சொல்ல வேண்டும். இது மட்டும்தான் அவரின் வேலை. ஆனால் அவர் அதை செய்யாமல், சட்டமன்றத்திற்குள் வந்து வாக்கிங் செய்கின்ற ஒரே ஆளுநர் யார் என்றால் அது நம் ஆர்.என்.ரவி அவர்கள் தான்.

பெயர்தான் ஆளுநர் உரை. நம் முதலமைச்சர் தயார் செய்து கொடுப்பதை படிப்பது மட்டும்தான் அவரின் வேலை. வந்துவிட்டு தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகிறீர்கள், தமிழ்த்தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சொல்கின்ற ஒரு ஆளுநர் தான் ஆர்.என்.ரவி அவர்கள். தேசிய கீதம் மட்டும்தான் பாட வேண்டும். தமிழ்த்தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சொல்கிறார். அது மட்டுமல்ல இரண்டு வருடங்களுக்கு முன்பு நம் மாநிலத்தின் பெயரையே மாற்ற வேண்டும் என்று கூறியவர் தான் இந்த ஆளுநர் ரவி அவர்கள். தமிழ்நாடு என்ற பெயர் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்கிறார். தமிழ்நாடு என்று ஏன் அழைக்க வேண்டும், தமிழ்நாடு என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று சொன்னவர்தான் ஆர்.என். ரவி அவர்கள். இதையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதற்கு உண்மையாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டியது யார். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். ஒரு கண்டனக் குரலாவது தெரிவிக்க வேண்டும். ஆனால் அவர் சட்டப்பேரவையில் என்ன பேசுகிறார். அவரின் முதல் பிரச்சினை என்ன என்று சொன்னார் தெரியுமா? ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேரவையில் பேசும்போது என்ன விண்ணப்பம் வைப்பார்? சட்டப்பேரவையில் எங்கள் அ.தி.மு.க. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதை தொலைக்காட்சியில் காட்டுங்கள் என்று கோரிக்கை வைப்பார்கள். ஆனால், நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன கோரிக்கை வைத்தார் தெரியுமா? நாங்கள் பேசுவதைக் காட்டுகிறீர்களோ இல்லையோ, தயவு செய்து கவர்னர் வருவதையும், செல்வதையும் காட்டுங்கள் என்று கோரிக்கை வைத்தவர்தான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்.

இன்னும் இரண்டு நாட்களில் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது. நிச்சயமாக எப்படி நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை நம் அரசுக்கான பாராட்டுச் சான்றிதழை, தமிழ்நாட்டு மக்கள் வழங்கினார்களோ, அதே போல ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலிலும், நம் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் மிகப்பெரிய வெற்றியை பெறப்போவது உறுதி. அது தெரிந்துதான் இதுவரைக்கும், பத்து தோல்வி பழனிச்சாமி 11 தோல்வி பழனிச்சாமியாக ஆகக்கூடாது என்று தேர்தலில் இருந்து விலகி விட்டார். இன்றைக்கு இந்தத் தேர்தலில் இருந்து விலகலாம், ஆனால் வர இருக்கின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில், நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சி அமைக்கப் போவது உறுதி. நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக அமரப்போவது உறுதி. அதற்கு சாட்சியாக ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வெற்றி நமக்குச் சொல்லப் போகிறது.

### சாதனைகளை எடுத்துச்சொல்லுங்கள்!

இங்கு வந்திருக்கின்ற நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம், கழக ஆட்சியின் சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு போய் நீங்கள் சேர்க்க வேண்டும். நிச்சயமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளிலும் குறைந்தது ஒருவராவது நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெற்று இருப்பார்கள். அதையெல்லாம் மக்களிடம் நீங்கள் எடுத்து சென்று சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு தெரியும் நேற்று தொலைக்காட்சியில் பார்த்து இருப்பீர்கள். செய்தித்தாள்களில் படித்து இருப்பீர்கள். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை நேற்று தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு நிதியை அவர்கள் தொடர்ந்து ஒதுக்குவது இல்லை. ஒவ்வொரு ஆண்டும் நாம் என்ன கேட்கிறோமோ அவர்கள் கொடுப்பது கிடையாது. ஆனால் இந்த முறை பார்த்தீர்கள் என்றால் தமிழ்நாடு என்ற பெயரையே நிதிநிலை அறிக்கையில் இருந்து தவிர்த்து இருக்கிறார்கள். எப்படி ஒன்றிய அரசு தமிழ்நாடு என்ற பெயரை தகர்த்து இருக்கிறதோ, அதேபோல் தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.க. அரசை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற நாடாளுமன்ற தேர்தலின் போது ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் எத்தனை முறை தமிழ்நாட்டிற்கு வந்தார். தேர்தலுக்கு முன்பு கிட்டத்தட்ட தேர்தல் பிரச்சாரத்திற்காக எட்டு முறை வந்தார். கன்னியாகுமரிக்கு சென்று தியானம் எல்லாம் செய்தார். ஆனால் இன்றைக்கு நாடாளுமன்ற தேர்தல் முடிந்து 6, 7 மாதங்கள் ஆகிறது. ஒரு முறையாவது தமிழ்நாட்டு பக்கம் எட்டிப் பார்த்தாரா அவர். இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு நிர்ணயித்துள்ளார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதியாவது நாம் வெற்றி பெற வேண்டும். வெல்வோம் இருநூறு; படைப்போம் வரலாறு என்று கூறி இருக்கிறார். அதற்கு இன்றிலிருந்து நம் பிரச்சாரத்தை துவங்க வேண்டும். சென்ற நாடாளுமன்ற தேர்தலில் இதே ராமநாதபுரத்தில்தான் எனது பிரச்சாரத்தை அண்ணன் நவாஸ் கனி அவர்களுக்காக வாக்கு கேட்டு தொடங்கி னேன். 40-க்கு 40 வெற்றி பெற்றோம். அதே போல் இன்றைக்கு சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரத்தை இதே இராமநாதபுரம் மாவட்டத்தில் துவங்கி இருக்கிறேன் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். நிச்சயம் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி பிரச்சாரத்தை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மணமக்கள் இருவருக்கும் ஒரேயொரு வேண்டுகோள். ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுத்து, எதற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதற்கு மட்டும் விட்டுக் கொடுத்து அ.தி.மு.க-வும் - பா.ஜ.க-வையும் போல யார், யாருக்கு அடிமை என்று போட்டி போடாமல் சுயமரியாதையோடு உங்களின் உரிமையைப் பெற்று வாழ வேண்டும். அதிகம் அறிவுரை சொல்ல தேவையில்லை நீங்கள் இருவரும் நன்கு படித்தவர்கள், மருத்துவர்கள். உங்களிடத்தில் இன்னொரு ஒரேயொரு வேண்டுகோள். உங்களுக்கு பிறக்கின்ற குழந்தை அது பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி, ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, அழகான ஒரு தமிழ் பெயரை சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, மணமக்கள் இருவரும் கலைஞரும் கழகமும் போல, தலைவரும் உழைப்பு போல பல்லாண்டு வாழ்க, வாழ்க என்று கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இதில் அமைச்சர் ராஜகண்ணப்பன், மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினரும், வகுப்பு வாரிய தலைவருமான நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழகப் பொருளாளருமான முருகேசன், முன்னாள் அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான சுப தங்கவேலன், முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, சுந்தர்ராஜன், கழக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் இன்பா எ.என்.ரகு, ஜி.பி. ராஜா, கழக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி, கழகத்தின் மாநில நிர்வாகிகள் பவானி ராஜேந்திரன், சம்பத், சுப திவாகரன், குணசேகரன், ரவிச்சந்திரன், பாஸ்கரன், நல்ல சேதுபதி, முருகவேல், ராமர், பெருநாவை போஸ், விஜய கதிரவன், ஆனந்த், மாவட்டக் கழக நிர்வாகிகள் கருப்பையா, ஆதித்தன், சுஜாதா, திசை வீரன், அகமது தம்பி, லட்சுமி, மணி முத்தரசி, தண்டபாணி, மண்டபம் கிழக்கு ஒன்றிய செயலாளர் நிலோபர்கான், பேரூர் செயலாளர் அப்துல் ரகுமான் மரக்காயர், முதன்மை மாவட்ட அரசு வழக்கறிஞர் கார்த்திகேயன், பேரூராட்சி தலைவர் ராஜா, பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஜெயந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், பேரூராட்சி மன்ற உறுப்பினருமான சம்பத் ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் நாகனி செந்தில்குமார், கிருஷ்ணகுமார், செல்வம், ஆசிப்கான், கிருஷ்ணராஜா, முகேஷ், மாநகர அமைப்பாளர் முத்துச்செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரமேஷ் கண்ணா, குமரகுரு, சன் சம்பத்குமார், சக்தியேந்தர், கோபிநாத், தவ்ஃபீக் ரகுமான், ராமநாதபுரம் இளைய மன்னர் நாகேந்திர சேதுபதி, சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மருத்துவர் சுதர்சனன், கழக தீர்மான குழு செயலாளர் அக்ரி கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.